தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 193/ந/2022
நாள் 12.12.2022

திரு. B.சுமன்,
குழித்துறை. – முறையீட்டு மனுதாரர்.

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி. – எதிர் மனுதாரர்

குழித்துறை, பழவார், பனவிளைவீடு என்ற முகவரியில் வசிக்கும் திரு.B.சுமன் என்பவரின் 30.10.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.11.2022 அன்று பெறப்பட்டு 193/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

குழித்துறை, பழவார், பனவிளைவீடு என்ற முகவரியில் வசிக்கும் திரு.B.சுமன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"நான் குழித்துறை நகராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்துள்ளேன். திறந்தவெளி ஒப்பந்த முறையில் Shredder cum Pulverizer இயந்திரம் வாங்கி கொடுப்பதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கப்பட்டது. அந்த ஒப்பந்தப்புள்ளியில் நான் கலந்து கொண்டேன். எனக்கு அந்த ஒப்பந்தப்புள்ளி கிடைத்தது. அந்த ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்துவிட்டு மீண்டும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்வதற்கு அறிவிப்பு வந்தது. இப்படி தொடர்ச்சியாக மூன்றுமுறை ரத்து செய்துவிட்டு நான்காவது முறையும் ஒப்பந்தபுள்ளியில் கலந்து கொள்வதற்கு எனக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டு இருந்தது. இதில் நான்காவது முறையும் எனக்கு கிடைத்தது. இந்த அறிவிப்பில் KEW என்ற விற்பனையாளரிடம் இருந்துதான் இயந்திரம் வாங்க வேண்டும் என்று கூறப்பட்டு இருந்தது. இதற்கு முன்பு மூன்று முறை வந்த அறிவிப்பில் எந்த விற்பனையாளரிடம் இருந்து வாங்க வேண்டும் என்று குறிப்பிடவில்லை.

இதைப்பற்றி நகராட்சி பொறியாளரிடம் கேட்டபோது அது எழுத்து பிழையில் உள்ள தவறு என்று கூறினார். உங்களுடைய செடியூலில் இந்த தவறு வராது. உங்கள் செடியூலில் என்ன குறிப்பிட்டுள்ளதோ அதன்படி ஒரு தரமான இயந்திரத்தை வாங்கிக் கொடுக்கவும் என்று கூறினார். அவர் கூறியது போல் என்னுடைய செடியூலில் மற்றும் பணி ஆணையில் குறிப்பிட்டபடி அரசால் அங்கீகரிக்கப்பட்ட, ISO சான்றிதழ் பெற்ற ஒரு தரமான நிறுவனத்திடம்

இருந்து முழு தொகையும் செலுத்தி இயந்திரத்தை வாங்கி வந்தேன். இங்கு கொண்டு வந்த போது இயந்திரத்தை வாகனத்தில் இருந்து இறக்கவும் விடாமல் அதை சோதித்தும் பார்க்காமல் சுகாதாரத்துறை ஆய்வாளர் இந்த இயந்திரம் platfarm நீயும் platfarm என்று தரக்குறைவான வார்த்தைகளால் பேசினார்.

மேலும் நகராட்சி பொறியாளரும், சுகாதாரத்துறை ஆய்வாளரும் நான் சொன்ன இடத்தில் வாங்கி இருந்தால் 20 + 20 = 40 சதவீதம் இலஞ்சப் பணம் கிடைத்திருக்கும். நீயும் அதுபோல் 40 சதவீதம் இலஞ்சப் பணம் தந்தால் உன்னுடைய இயந்திரத்தை ஏற்றுக்கொள்வோம். இல்லாவிட்டால், இந்த இயந்திரம் தரமற்றது என்று சான்றிதழ் அளிப்போம் என்று சொன்னார்கள். ஆனாலும் நான் இலஞ்சம் கொடுக்க மறுத்ததால், அவர்கள் சொன்ன இடத்தில் இருந்துதான் வாங்கவேண்டும் என்று 27.01.2022 அன்று எனக்கு கடிதம் கொடுக்கப்பட்டது.

நான் கடன் வாங்கி முழுத்தொகையும் செலுத்திதான் இயந்திரம் வாங்கினேன். அவர்களுக்கு இலஞ்ச பணம் கொடுக்காத காரணத்தால் என்னை இப்படி அலையவைத்தார்கள். மேலும் மூன்றுமுறை இயந்திரத்தை கொண்டுவர சொல்லி கிரைன் மூலம் இறக்கி ஏற்ற வண்டி வாடகையும் எல்லாம் சேர்த்து நிறைய நட்டங்களை ஏற்படுத்தி விட்டார்கள். எனது பணி உத்தரவு ரத்து செய்யப்பட்டதுடன் எனது பணி உத்தரவில் இல்லாத வேலைகளையும் செய்ய வைத்து எனக்கு ரூ 6,00,000/– (ஆறு லட்சம்) நட்டம் ஏற்படுத்தி உள்ளார்கள். குழித்துறை நகராட்சி பொறியாளரும், சுகாதார ஆய்வாளரும் சொன்ன இடத்தில் இருந்த திரு.ஹரிகிருஷ்ணன் என்பவர், ''என்னிடம் மிஷின் வாங்கவில்லை என்றால் நீ எப்படி மிஷின் வைக்கப்போகிறாய் என்று பார்த்துக் கொள்கிறேன்'', என்று மிரட்டல் விடுத்தார்.

எனக்கு தந்த பணி உத்தரவை வேறு ஒரு ஒப்பந்ததாரருக்கு கொடுத்து அவர்கள் கூறிய இடத்தில் இருந்து இயந்திரம் வாங்க வைத்தார்கள். அந்த இயந்திரம் நான் வாங்கி வைத்த இயந்திரத்தைவிட தரம் குறைந்ததாக இருக்கிறது. மேலும் எனது இயந்திரத்தில் இல்லாத குறைகளை கூறி, தரம் அற்றது என்று கூறினார்கள். ஆனால் இப்போது இருக்கும் இயந்திரம் அதைவிட அதிகமாக குறைகள் இருக்கின்ற போதும் அதை தடை செய்யவில்லை.

மேலும் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படி இந்த இயந்திரத்தில் கம்பு வைத்து தள்ளவேண்டுமா என்ற கேள்விக்கு இந்த இயந்திரத்தில் கம்பு வைத்து தள்ள வேண்டாம் என்று பதில் தந்தார்கள். ஆனால் இந்த இயந்திரம் கம்பு வைத்து தள்ளும் நிலையில் உள்ளது. எனவே தாங்கள் இந்த திறந்தவெளி ஒப்பந்தபுள்ளியில் எங்கு தவறு நடந்துள்ளது என்று அறிந்து தக்க நடவடிக்கை எடுக்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 07.11.2022 நாளிட்ட கடிதம் மூலம் குழித்துறை நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

குழித்துறை நகராட்சி ஆணையாளர் தனது 24.11.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

''நகர்மன்ற தீர்மானம் எண்.3713, நாள் 26.07.2021 தீர்மானத்தின்படி மார்க்கெட் பகுதியிலுள்ள நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையத்திற்கு Shedder – Cum - Pulverizer Machine வாங்குவதற்கு ரூ. 5.05 இலட்சம் மதிப்பீட்டிற்கு அனுமதி பெறப்பட்டது.

முதல் ஒப்பந்தப்புள்ளி 18.08.2021 அன்று அழைக்கப்பட்டது. அதில் 5 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. மிகக் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக 23.86% மதிப்பீட்டை விட குறைவாக பெறப்பட்டதால் பணியின் தரத்தைக் கருத்தில் கொண்டு மறு ஒப்பந்தப்புள்ளி, 15.09.2021 அன்று அழைக்கப்பட்டது.

2வது ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட 6 ஒப்பந்தப்புள்ளிகளிலும் மிகக் குறைவான ஒப்பந்தப்புள்ளி 26.88% மதிப்பீட்டை விடகுறைவாக இருந்ததால், மறு ஒப்பந்தப்புள்ளி 3–வது ஒப்பந்தப்புள்ளி நாள் 22.10.2021 அன்று அழைக்கப்பட்டது. இந்த ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட 7 ஒப்பந்தப்புள்ளிகளிலும் மிக குறைவான ஒப்பந்தப்புள்ளி 26.58% மதிப்பீட்டை விடகுறைவாக இருந்ததினால், மறு ஒப்பந்தப்புள்ளி 4–வது ஒப்பந்தப்புள்ளி நாள் 09.11.2021 அன்று அழைக்கப்பட்டது.

நான்காவது ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக்குறைவான ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட 0.14% அதிகமாக இருப்பினும், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக இருந்ததால் ஒப்பந்ததாரர் திரு.சுமன் என்பவர் வழங்கிய ஒப்பந்தப்புள்ளி, நகர்மன்ற தீர்மானம் எண்.3793 நாள் 30.11.2021 ல் நகர்மன்ற ஒப்புதல் பெறப்பட்டு, பணி உத்தரவு 02.12.2021 அன்று வழங்கப்பட்டது. பணியின் ஒப்பந்தக்காலம் 30 தினங்கள் ஆகும். ஒப்பந்ததாரர் 26.01.2022 அன்று மிஷினை விநியோகம் செய்ததை ஆணையர், சுகாதார அலுவலர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோர் நேரில் ஆய்வு செய்து 27.01.2022 அன்று மிஷினை குறித்தான குறிப்பு பெற சுகாதார அலுவலருக்கு அலுவலகக் குறிப்பு கொடுக்கப்பட்டது. அதன்படி சுகாதார அலுவலர், தனது குறிப்பில் மிஷினின் தரம் மற்றும் Company–ன் பெயர் எதுவும் குறிப்பிடப்படவில்லை எனவும் தரத்தைக் குறித்து ஐய்யப்பாடு உள்ளதாகவும், வேறு ஒரு இயந்திரம் வாங்கி நிறுவலாம் எனவும் குறிப்பு வழங்கினார்.

அதன்படி முதல் அறிவிப்பு குழித்துறை நகராட்சி அலுவலக கடித எண்.1485/2021/இ1, நாள் 27.01.2022ல் வேறு ஒரு இயந்திரம் KEW brand நிறுவனத்திடமிருந்து வாங்கி வழங்குமாறு 27.01.2022ல் முதல் அறிவிப்பு ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டது. அதற்கு பதிலாக மனுதாரர் தனது 01.02.2022 மற்றும் 04.02.2022 நாளிட்ட கடிதங்களில் தன்னுடைய இயந்திரத்தை ஏற்றுக்கொள்ளுமாறு, கோரியிருந்தார்.

ஒப்பந்ததாரர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் ஒருவார காலத்திற்குள் மிஷினை வழங்க, 2வது அறிவிப்பு குழித்துறை நகராட்சி அலுவலகக் கடித எண்.1485/2021/இ1, நாள் 03.03.2022 மூலம் வழங்கப்பட்டது.

ஒப்பந்ததாரர் தனது 10.03.2022 நாளிட்ட கடிதத்தில் ஒருவருட காலத்திற்கு மிஷினில் எவ்வித பாதிப்பு ஏற்பட்டாலும் நிவிர்த்தி செய்து தரப்படும் என ஒப்புதல் அளித்து தன்னுடைய இயந்திரத்தை ஏற்று கொள்ளுமாறு குறிப்பிட்டிருந்தார்.

அதன்படி 23.03.2022 அன்று நகர்மன்ற தலைவர், நகர்மன்ற உறுப்பினர், ஆணையர், நகராட்சி பொறியாளர் மற்றும் சுகாதார அலுவலர் ஆகியோரின் முன்னிலையில் சோதனை ஓட்டம் நடத்தப்பட்டது. அப்பொழுது குப்பைகள் சரிவர அரைக்கப்படவில்லை. அரைக்கப்பட்ட குப்பைகளும் மிஷினுக்கு அருகில் விழாமல் தூரத்தில் சிதறி விழுந்தது. குப்பைகளை தன்னிச்சையாக இழுத்து அரைக்காமல் சிக்கிக் கொண்டு மிஷின் நின்று விட்டது.

இந்த குறைபாடுகளை எல்லாம் எடுத்துரைத்து, குறைபாடுகளை நிவிர்த்தி செய்தோ அல்லது வேறு மிஷினையோ 15 நாட்களுக்குள் விநியோகம் செய்யுமாறு, 3வது அறிவிப்பு

குழித்துறை நகராட்சி அலுவலக கடித எண். 1485/2021/இ1, நாள் 04.04.2022 மூலம் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டது.

இதற்கு பதிலாக ஒப்பந்ததாரர் தனது 13.04.2022 நாளிட்ட கடிதத்தில் கூடுதலாக 15 நாட்கள் தேவை எனவும் 13.05.2022 அன்று மிஷினை விநியோகம் செய்வதாகவும் கூறியிருந்தார்.

ஆனால் அந்தக் காலக்கெடுவுக்குள் மிஷினை வழங்க ஒப்பந்தாரர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் 13.05.2022–க்குள் மிஷினை வழங்க வேண்டும் என வலியுறுத்தி, 4–வது அறிவிப்பு குழித்துறை நகராட்சி அலுவலக கடித எண்.1485/2021/இ1, நாள் 04.05.2022 மூலம் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டது.

அதன்பிறகும் ஒப்பந்ததாரர் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாத காரணத்தினால், நகர்மன்ற தீர்மானம் எண்.127, நாள் 20.05.2022–ன் மூலம் மன்ற ஒப்புதலுடன் பணி உத்தரவு இரத்து செய்யப்பட்டு, இறுதி அறிவிப்பாக குழித்துறை நகராட்சி அலுவலகக் கடித எண்.1485/2021/இ1, நாள் 24.05.2022 மூலம் வழங்கப்பட்டது. பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மறு ஒப்பந்தப்புள்ளி 07.06.2022 அன்று அழைக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக்குறைவான மதிப்பீட்டை விட 0.01% குறைவாக வழங்கிய திரு. ஜான்சன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி, நகர்மன்ற தீர்மானம் எண்.146, நாள் 14.06.2022 தீர்மானத்தின்படி ஏற்றுக்கொள்ளப்பட்டு பணி உத்தரவு 15.06.2022 அன்று வழங்கப்பட்டது.

அதன்படி ஒப்பந்ததாரர் KEW Brand Machine- ஐ 29.07.2022 அன்று வழங்கி இதுநாள் வரை மிஷின் நல்ல முறையில் இயங்கி வருகின்றது'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் குழித்துறை நகராட்சி ஆணையரும் 29.11.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 16.11.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.B.சுமன், 29.11.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் கலந்து கொள்ள இயலாததால், அவருக்கு பதிலாக அவருடைய சகோதரர் திரு. B. ஜிபின் என்பவர் கலந்துகொண்டு பின்வருமாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

குழித்துறை நகராட்சியில் shredder cum pulverizer என்கின்ற இயந்திரத்தை வாங்குவதற்கு குழித்துறை நகராட்சியால் ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டது. குழித்துறை நகராட்சியால் பெறப்பட்ட 7 ஒப்பந்தப்புள்ளிகளிலும் மிகக் குறைவான ஒப்பந்தத் தொகை குறிப்பிட்டிருந்த நிலையில், அந்நகராட்சியில் நடைபெற்ற 3 ஒப்பந்தப் புள்ளிகளும் ரத்து செய்யப்பட்டு, 4–வதாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, அதில் L1 ஆன எங்களுக்கு ஒப்பந்தம் ஒதுக்கப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகளில் குறிப்பிட்ட பிராண்ட் அதாவது KEW என்கின்ற பிராண்ட் மட்டும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் எங்களுக்கு அளிக்கப்பட்ட பணி ஆணையிலோ அல்லது ஷெட்யூலிலோ மேற்கண்ட பிராண்ட் பற்றி குறிப்பிடப்படவில்லை. ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளபடி குறிப்பிட்ட காலத்திற்குள் எங்களால் மேற்கண்ட இயந்திரம் (KCL brand) குழித்துறை நகராட்சிக்கு அளிக்கப்பட்டது. அதனை ஆய்வு செய்த நகராட்சி ஆணையர் மற்றும் அலுவலர்கள் எங்களால் அளிக்கப்பட்ட இயந்திரத்தில் தரம் மற்றும் நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்படவில்லை எனவும், இயந்திரத்தின் தரத்தில் ஐயப்பாடு உள்ளது எனவும், எங்களால் அளிக்கப்பட்ட இயந்திரத்தில் அரவைப் பொருட்கள் தானாகவே நகராமல், கட்டையை வைத்து தள்ள வேண்டியுள்ளது என்றும் தெரிவித்து எங்களால் அளிக்கப்பட்ட

இயந்திரத்தை ஏற்க மறுத்துவிட்டனர். மேற்கண்ட இயந்திரத்தை ஏற்றுக்கொள்ளுமாறு நகராட்சியில் தெரிவித்தபோது, அவர்கள் கூறிய இடத்தில் மேற்கண்ட இயந்திரத்தை வாங்கும்படியும், இல்லையெனில் இயந்திரத்திற்குறிய கமிஷன் தொகையை கொடுத்தால், எங்களது இயந்திரம் ஏற்கப்படும் என நகராட்சியினர் தெரிவித்தனர்.

எங்களால் அளிக்கப்பட்ட இயந்திரத்தை வாங்க மறுத்த நகராட்சியினர், மேற்கண்ட இயந்திரம் வாங்குவது தொடர்பாக நகராட்சியால் மற்றொரு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, வேறொரு ஒப்பந்ததாரரிடம் இயந்திரம் பெறப்பட்டு தற்போது ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த இயந்திரத்திலும் அரவைப் பொருட்கள் தானாக நகராமல் கட்டையை வைத்துதான் நகர்த்துகின்றனர். அதற்கான புகைப்பட ஆதாரத்தை இம்முறை மன்றத்தில் சமர்பிக்கப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளியில் முறையாகக் கலந்து கொண்டு எங்களால் அளிக்கப்பட்ட இயந்திரத்தை நகராட்சியினர் தரமாக இல்லை என தெரிவித்து ஏற்க மறுத்ததால், எனக்கு பெருத்த நட்டம் ஏற்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட ஒப்பந்தப் புள்ளி தொடர்பாக உரிய விசாரணை மேற்கொண்டு தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் இம்முறைமன்றத்தில் எனது சகோதரரால் இம்முறை மன்றத்திற்கு 30.10.2022 அன்று அனுப்பியுள்ள நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் இந்நேர்வு தொடர்பாக நகராட்சியில் வெளியிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள், தரச்சான்றின் நகல்கள் மற்றும் மேற்கண்ட இயந்திரம் தொடர்பான புகைப்படங்களின் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான குழித்துறை நகராட்சி ஆணையாளராக பணிபுரியும் திருமதி.க.ராமதிலகம் மற்றும் நகராட்சி பொறியாளராகப் பணிபுரியும் திருமதி.செ.பேரின்பம், ஆகிய இருவரும் 29.11.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:

"குழித்துறை நகராட்சி நகர்மன்ற தீர்மானம் நாள் 26.7.2021ன் படி shredder cum pulverizer என்கின்ற இயந்திரத்தை வாங்குவதற்கு குழித்துறை நகராட்சியால் ஒப்பந்தப் புள்ளிகள் 3 முறை கோரப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி விலைகள் மிகவும் அதிகமாக குறிபிடப்பட்டிருந்த நிலையில் 4–வது முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் மேற்கண்ட இயந்திரத்திற்கான பிராண்ட் KEW, 11.10.2021 மற்றும் 9.11.2021 நாளிட்ட குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் குறிப்பாக தெரிவிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி விலையை குறிப்பிட்டிருந்த திரு. சுமன் என்பவர் தேர்வு செய்யப்பட்டு, மேற்கண்ட இயந்திரத்தை வாங்குவதற்கான பணியாணை மனுதாரருக்கு வழங்கப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் குறிப்பிட்டிருந்த KEW என்கின்ற பிராண்ட் வாங்காமல், வேறொரு பிராண்ட் இயந்திரத்தை நகராட்சியில் சப்ளை செய்திருந்தார். மனுதாரரின் முன்பே, மேற்கண்ட இயந்திரம் சரியாக ஓடுகிறதா என சரிபார்ப்பு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின்போது மேற்கண்ட இயந்திரம் சரியாக ஓடாததாலும், தரமற்றதாக இருந்ததாலும் அதாவது அரவைப் பொருட்களை தன்னிச்சையாக இழுக்காததாலும், அரைக்கப்பட்ட பொருட்கள் இயந்திரத்தின் அருகில் விழாமல் சிதறி விழுந்ததாலும் மேற்கண்ட இயந்திரத்தை நகராட்சியால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதையும், தரமற்ற இயந்திரத்தை நகராட்சிக்கு அளித்த மனுதாரரின் ஒப்பந்தம் 24.5.2022 அன்று ரத்து செய்யப்பட்டு அதனை

மனுதாரருக்கும் தெரிவிக்கப்பட்டுவிட்டது என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் மேற்கண்ட இயந்திரத்திற்கு 7.6.2022 அன்று மேற்கண்ட வேறொரு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதற்கான அறிவிப்பும் முறையாக தகவல் பலகையில் இடம் பெறச்செய்தும், நேரிலும் ஒப்பந்ததாரருக்கு அளிக்கப்பட்டு, நகர் மன்றத் தீர்மானம் நாள் 14.6.2022ன்படி குறைந்த அளவு ஒப்பந்தப்புள்ளி குறிப்பிட்டிருந்த ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தம் அளிக்கப்பட்டது என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். எனவே, மேற்கண்ட ஒப்பந்தப் புள்ளியில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை என இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்நேர்வு தொடர்பாக நகராட்சி ஆணையரான எனது 24.11.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படியும் இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளனர்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், குழித்துறை நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை, வாக்குமூலம் மற்றும் நகராட்சி பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறையைச் சார்ந்த மனுதாரர் திரு.B.சுமன் என்பவர் தனது 30.10.2022 நாளிட்ட மனுவில் தன்னால் ஒப்பந்தப்புள்ளி மூலம் குழித்துறை நகராட்சிக்கு வாங்கி வழங்கப்பட்ட 20 HP Shredder –Cum-Pulverizer என்கிற உரம் கூழாக்கும் இயந்திரத்தை குறிப்பிட்ட நிறுவனத்திலிருந்து வாங்கி வழங்காததால் இயந்திரமானது தரமற்றது என தெரிவித்து ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டது தொடர்பாக புகார் அளித்துள்ளார்.

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் இடத்திற்கு 20 HP Shredder –Cum-Pulverizer என்கிற ஒரு இயந்திரம் ரூ 5.05 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கி பொருத்திடும் பணிக்கு நகராட்சியால் 18.08.2021, 15.09.2021 மற்றும் 22.10.2021 ஆகிய தேதிகளில் வெளியிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக்குறைந்தளவு மதிப்பில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதால், இயந்திரத்தின் தரத்தினை கருத்திற்கொண்டு, 09.11.2021 அன்று வெளியிடப்பட்ட மறு ஒப்பந்தப்புள்ளியில் மனுதாரர் திரு.B.சுமன் என்பவர் ஒப்பந்தத்தை பெற்றுள்ளார் என்பதையும், நகராட்சியால் 09.11.2021 அன்று வெளியிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் "KEW Brand" இயந்திரத்தை வாங்கி வழங்கிட வேண்டும் என்றும், ஆனால் மனுதாரருக்கு வழங்கிய பணி ஆணையிலும், (Work Order), ஒப்பந்தப்புள்ளி இணைப்பிலும் (Tender Schedule) "KEW Brand" என குறிப்பிடப்படவில்லை என்பதையும் ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது.

மனுதாரர் திரு.B.சுமன் என்பவரால் ISO தரம்பெற்ற KCL என்கிற நிறுவனம் மூலம் வாங்கி வழங்கப்பட்ட இயந்திரத்தை நகராட்சியின் சுகாதார அலுவலர் பரிசோதித்து அது தரமற்றது எனவும் மேற்படி இயந்திரத்தினை "KEW Brand" என்கிற நிறுவனத்திலிருந்து வாங்கி வழங்கிட வேண்டும் எனவும் அவ்வாறு இல்லையெனில் ஒப்பந்தம் இரத்து செய்யப்படும் எனவும் குழித்துறை நகராட்சி ஆணையர் தனது கடிதங்களின் மூலம் மனுதாரரை நிர்ப்பந்தம் செய்துள்ளது ஆவணங்களின் வாயிலாக தெரிய வருகிறது.

இறுதியாக மனுதாரர் மாற்று இயந்திரத்தை வாங்கி வழங்காததால், 07.06.2022 அன்று மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வேறொரு ஒப்பந்ததாரர் மூலம் "KEW Brand" இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளதை ஆவணங்களின் மூலம் அறியமுடிகிறது.

2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விதிகளில் அத்தியாயம் 4–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் அறிவிப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் தொடர்பாக வகுக்கப்பட்டுள்ள விதிகளில், விதி 13 (2) (a)ல் ஒப்பந்தப்புள்ளி கோரும் ஆவணங்களில் "வணிகச் சின்னப் பெயர்கள் மற்றும் அட்டவணை எண்களை தவிர்த்தல் வேண்டும் மற்றும் அவைகளைத் தவிர்க்க முடியாதவிடத்து, வணிகச்சின்ன பெயருடன் "அல்லது நிகரானவை" என்ற சொற்றொடர்கள் சேர்த்தல் வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது.

The Tamil Nadu Transparency in Tender Rules, 2000 under Chapter IV "Notice inviting Tenders and Tender Documents":-

Rule 13 (2) Unbiased technical specification shall be prepared by observing the following safeguard, namely.

(a) "Use of brand names and catalogue numbers shall be avoided and where it becomes unavoidable, along with the brand name the expression "or equivalent" shall be added.

ஆனால், குழித்துறை நகராட்சி ஆணையரால் கோரப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் "KEW Brand" இயந்திரத்தினை வாங்கி வழங்கிட வேண்டும் என ஒரே ஒரு நிறுவனத்தை குறிப்பிட்டுள்ளதன் மூலம் ஒப்பந்தப்புள்ளி விதி 13 (2) (a) ல் வரையறுக்கப்பட்டுள்ள ஷரத்து மீறப்பட்டுள்ளது தெள்ளத் தெளிவாக தெரிகிறது.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் ஒரு நிறுவனத்தை மட்டும் குறிப்பிடும் போது, ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளும் ஒப்பந்ததாரர்கள் அந்நிறுவனம் மூலம் எவ்வாறு வெவ்வேறு விலை மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி பெறமுடியும் என்கிற வினா எழுகிறது. இது ஒப்பந்தப்புள்ளிச் சட்டத்திற்கு முரணானது. மேலும் அந்நிறுவனமானது ஏகபோக தனிஉரிமை (Monopoly) பெற்ற நிறுவனமாக செயல்படுவதற்கு வழிவகுக்கும். மனுதாரால் KCL நிறுவனம் மூலம் வாங்கி வழங்கப்பட்ட இயந்திரமானது தரமற்றது என சுகாதார அலுவலரால் வழங்கப்பட்ட அறிக்கை எதுவும் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் ஒரு குறிப்பிட்ட தர அடையாளம் (Brand) தெரிவித்ததன் மூலம் ஒப்பந்தப்புள்ளி சட்ட விதிமுறைகள் எதுவும் நகராட்சியின் ஆணையாளர், பொறியாளர் மற்றும் சுகாதார அலுவலர் ஆகியோர்களால் பின்பற்றப்படாமல் தன்னிச்சையாக, தங்களது அதிகாரத்தை தவறான வழியில் துஷ்பிரயோகம் செய்து நிர்வாகச் சீர்கேட்டை ஏற்படுத்தியதாக இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. இவ்வாறு நிர்வாகத்தில் ஒப்பந்தப்புள்ளி விதி முறைகள் பின்பற்றப்படாமல் மெத்தனமாகவும், பொறுப்பற்ற முறையிலும் செயல்பட்ட குழித்துறை நகராட்சி ஆணையாளர், பொறியாளர், சுகாதார அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய விதிகளின்கீழ் துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்ய முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. மேலும், தற்போது வாங்கப்பட்டுள்ள "KEW Brand" Shredder –Cum-Pulverizer இயந்திரத்தை REE (Regional Executive Engineer), திருநெல்வேலி தலைமையில் ஆய்வு செய்யவும், இயந்திரத்தை கொள்முதல் செய்வதில் ஒப்பந்த விதிமுறைகள்

முறையாக கடைபிடிக்கப்பட்டுள்ளனவா என்பதையும் ஆய்வு செய்து, நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அறிக்கையாக சமர்ப்பிக்க திருநெல்வேலி மண்டல செயற்பொறியாளருக்கு (REE, Thirunelveli) உத்தரவிடப்படுகிறது.

The D M A is directed to issue a detailed circular reiterating the Tender Transparency Act and Rules that should be followed like a gospel wherein specific brands have been disallowed from mentioning in the Tender conditions. In this particular case the Kuzhithurai Municipality has specifically chosen KEW Brand in the Tender Notification dated 09.11.2021 and 11.10.2021 while calling for quotations. This is obviously repugnant to rules and blatantly violative of the rules of Tender procedure. How could the Local Body expect a competitive bidding response from one manufacturer supplier alone? This is absolutely unjust and unfair besides excluding level-playing field for other manufacturers and patronising favoritism. Hence suitable disciplinary action against officers concerned in the Tender process and purchase should be initiated as this practice sets a bad and inadmissible precedent.

2022 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. B.சுமன்,
பனவிளைவீடு, பழவார்,
குழித்துறை 629 163, கன்னியாகுமரி மாவட்டம்.

2) ஆணையாளர், குழித்துறை நகராட்சி,
குழித்துறை – 629 165, கன்னியாகுமரி மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரியிடப்பட்ட உரையில்)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

13/12/22

செயலாளர்

13/12/22

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை-600 032